பக்கங்கள்:-22

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 28 | ஞாயிற்றுக்கிழமை | 11.02.2024 | அதிர்வு 194 |
|---|---|---|---|---|---|

## புத்தளத்தில் ஒருவர் சுட்டுப் படுகொலை!




(ரஸீன் ரஸ்மின்)

புத்தளத்தில்குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப் பட்டுள்ளார். 06



# தேர்தலை ஒத்திவைக்க ரணில் அரசு பிரயத்தனம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



"ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு ஈடுபட்டு வருகின்றது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார். 06



## இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல்!

### நாடாளுமன்றத் தேர்தலும் நடக்கும் என்று ஆஸ்திரேலியாவில் ரணில் உறுதியளிப்பு



இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என்பன நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் வைத்து ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே ஜனாதிபதி இந்தத் தகவலை வெளியிட்டார். 06




இலங்கை அரசியலில் நீண்ட காலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வகித்தவர் ரணில் விக்கிரமசிங்க. 1977 இல் தொடங்கி ஜனாதிபதியாகும் வரையில் 45 வருடங்கள் தொடர்ந்து எம்.பி. பதவியை வகித்தவர்.

கடந்த பொதுத் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டு சுமார் 8, 9 மாதங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி 06



# அயோத்தி ராமர் கோயிலில் நாமல் தரிசனம்

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்துக்குச் சென்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அங்கு அயோத்தியில் அமைந்துள்ள ராமர் கோயிலில் தரிசனம் செய்தார்.

இந்தத் தரிசன நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது என்று நாமல் ராஜபக்ஷ எம்.பியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.







# புதிய களனிப் பாலம் மூடப்பட்டுள்ளது

புதிய களனி பாலம் நாளை அதிகாலை ஐந்து மணி வரை மூடப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருத்தப் பணிகள் காரணமாக பாலம் நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் மூடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், கொழும்பில் இருந்து கட்டுநாயக்கவை நோக்கியும், கட்டுநாயக்கவிலிருந்து கொழும்பு நோக்கியும் பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், புதிய களனிப் பாலம் ஊடாகத் துறைமுகத்தை நோக்கிப் பயணிக்க முடியாது எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# ஹட்டன் - டிக்கோயா வீதியில் பஸ் - ஓட்டோ மோதி விபத்து

(மஸ்கெலியா செய்தியாளர்:செ.தி.பெருமாள்)

ஹட்டன் – டிக்கோயா பிரதான சாலையில் அழுத்கல பகுதியில் ஓட்டோவும் அரச பஸ்ஸும் மோதுண்டதால் ஓட்டோவில் பயணம் செய்த இருவர் காயமடைந்தனர்.

பத்தனை ஜயசிரிபுரவைச் சேர்ந்த 50 வயது உடைய பெண்ணும், 30 வயது உடைய பெண்ணும் காயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என ஹட்டன் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அரச பஸ், ஓட்டோ ஆகியவற்றுடன் அவற்றின் சாரதிகளையும் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# அரிய வகை ஆமையுடன் மன்னாரில் மூவர் கைது!

















(மன்னார் நிருபர்)

"மன்னார் வங்காலை கடல் பகுதியில் அரிய வகை ஆமை ஒன்றை உயிருடன் உடைமையில் வைத்திருந்த குற்றச் சாட்டில் மூவர் நேற்று சனிக்கிழமை வங்காலை கடற்படையினரால் கைது செய்யப்படுள்ளனர்.

இந்த அரிய வகை ஆமை கடல் பகுதியில் பிடிக்கப்பட்டு, இறைச்சிக்காகக் கரையை நோக்கிக் கொண்டு வரப்பட்ட நிலையில் படகில் இருந்த மூன்று மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மன்னார் வனஜீவராசிகள் திணைக்களத்திடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர்களை கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

இந்த மூவரையும் முதல் கட்ட விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் அந்த் ஆமையைத் பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட வலைகள்,வெளி இணைப்பு இயந்திரம், படகு போன்றவற்றையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் மூன்று விமான நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பு அதானி குழுமத்துக்கு?

## இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடக்கின்றது

இலங்கையில் உள்ள 3 விமான நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பை பெற்றுக்கொள்வது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் அதானி குழுமம் பேச்சு நடத்தியுள்ளது என இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்போது, கட்டுநாயக்க, இரத்மலானை மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கையின் சுற்றுலா, காணி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

தனியார் பங்காளர்களின் ஆதரவை இந்த விமான நிலையங்களின் வசதிகளை விரிவுபடுத்துவதற்கும் பயணிகளின் திறனை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது எனவும் அதானி குழுமம் இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது என்றும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.



அதானி குழுமம் தற்போது இந்தியாவில் உள்ள மும்பை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலுள்ள 7 விமான நிலையங்களின் நிர்வாக விவகாரங்களை நிர்வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 58 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க நகைகளை கடத்த முயன்ற விமான நிலைய பணிப்பெண் கைது



சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 58 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க நகைகளை கடத்த முயன்ற பெண் ஒருவர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் விமான நிலையத்தில் சுத்திகரிப்பு பணியில் ஈடுபடும் வெயாங்கொடை பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய பெண்ணாவார்.

சந்தேக நபர் விமான நிலைய புறப்படும் முனையத்தில் வைத்து கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண் ஒருவர் விமான நிலையத்தில் உள்ள கழிவறை ஒன்றில் வைத்து பொதி ஒன்றை சந்தேக நபருக்கு கொடுத்துள்ளார் எனவும், மேற்படி பொதியை விமான நிலையத்திற்கு வெளியே உள்ள நபரிடம் கொடுத்தால் 60 ஆயிரம் ரூபா கிடைக்கும் என்று அவர் கூறியுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# பொலிஸாருக்கு அடுத்த வாரம் முதல் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அதிகரிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவு அடுத்த வாரம் முதல் வழங்கப்படும் என பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அதிகரிக்கப்பட்ட உணவு, பயண மற்றும் தங்குமிட கொடுப்பனவு அடுத்த வார ஆரம்பத்தில் இருந்து வழங்கப்படும் என பதில் நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி, இதுவரையில் கிடைத்த கொடுப்பனவுக்கு மேலதிகமாக, வரவு-செலவுத்திட்டத்தின்மூலம்அதிகரிக்கப்பட்டகொடுப்பனவு விரைவாக வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். கனிஷ்ட அதிகாரிகளுக்கு 17 ஆயிரம்



ரூபாவாக காணப்பட்ட இந்த மேலதிக கொடுப்பனவு, 11, 800 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது.

அந்த தொகையின் 50 வீதத்தை விரைவாக பெற்றுக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பதில் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.




# மருந்து நிறுவனங்களை விசாரணை செய்ய முடிவு

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து மருந்து விற்பனை மற்றும் கொள்வனவு நிறுவனங்களையும் விசாரிக்கும் பணியை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மையில் மருந்து கொள்வனவு செய்த நிறுவனங்கள் மற்றும் அதனுடைய தொடர்புடையவர்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஹியுமன் இம்யூனோகுளோபுலின் ஊழல்கள் தொடர்பான விசாரணைகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து மேற்படி கூட்டத்தில் ஆராயப்பட்டதோடு, பொலிஸார் சமீபத்தில் சட்டமா அதிபருடன் தங்களது விசாரணையின்போது முன்னெடுக்கப்பட்ட சட்ட ரீதியான விடயங்கள் சம்பந்தமாகவும் பகிரப்பட்டது.

ஹியுமன் இம்யூனோகுளோபுலின் கொள்வனவின் போது நடைபெற்ற முறைகேடான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, முன்னாள் அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீந்திரகுப்த மற்றும் பலர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை அதிகரிப்பு

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை 1 முதல் 4 செல்சியஸினால் அதிகரித்துள்ளது.

புத்தளத்தில் அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இதன்படி, புத்தளத்தில் 33.7 செல்சியஸாக வெப்பநிலை பதிவாகியதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரியில் 33.5 செல்சியஸ் ஆக வெப்பநிலை பதிவாகியது. கட்டுநாயக்கவில் வெப்பநிலை 33.4 செல்சியஸாக உயர்ந்துள்ளது.

அம்பாந்தோட்டை உள்ளிட்ட பல பகுதிகளில் வெப்பநிலை அதிகரித்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் வெப்பமான காலநிலை மேலும் அதிகரிக்கலாம் என திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.





# நோட்டன் பிரதான சாலையில் போக்குவரத்து பாரிய மரம் சரிந்ததால் நேற்றுத் தடைப்பட்டது

(மஸ்கெலியா செய்தியாளர்:செ.தி.பெருமாள்)

மத்திய மலைநாட்டில் கடுமையான வெப்பம் நிலவும் போதும் இன்று காலை வேளையில் மத்திய மலைநாட்டில் கடும் காற்று வீசியது. இதனால் ஹட்டன் நோட்டன் பிரதான சாலையின் உள்ள வனராஜா தோட்டப் பகுதியில் உள்ள பாரிய வாகை மரம் சரிந்து விழுந்தது. அதனால் அவ்வீதியூடாக வாகனங்கள் போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டது.

அதன் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் அந்த இடத்தில் சாய்ந்த பாரிய மரத்தை வொட்டி அகற்றினர்.

அனைத்து தொடர்ந்து போக்குவரத்து வழமைக்கு திரும்பியது என ஹட்டன் வலயப் போக்குவரத்து பொலிசார் தெரிவித்தனர்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிரப்பப்படும் வரை – அப்பதவிக்குத் தான் நியமிக்கப்படும் வரை – நாடாளுமன்றுக்கு வராமல் இருந்தவர். மற்றப்படி இலங்கையில் நீண்ட காலம் தொடர்ந்து எம்.பியாக இருந்தவர் அவர்.

கேள்விகளுக்கு பல சமயங்களிலும் உரிய பதில் கொடுக்காமல் வெட்டிப் பேசும் அரசியல் தந்திரசாலியும் அவர்தான்.

வரும் ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவாரா இல்லையா என்ற கேள்விக்கு இன்னும் பகிரங்கமாக அவர் பதில் கூறவில்லை.

ஆஸ்திரேலியா சென்றிருக்கும் அவரிடம் இந்தியச் செய்திச் சேவை ஒன்று குறுகிய நேர செவ்வியொன்றை கண்டது. அந்தச் செவ்வியின் கேள்வி – பதில் பின்வருமாறு அமைந்தது:–

**கேள்வி:** இந்த ஆண்டு உங்கள் நாட்டில் தேர்தல் நடக்கின்றது...?

**ரணில்:** ஆம். ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்.

**கேள்வி:** நீங்கள் மீண்டும் பதவிக்கு வருவது தொடர்பில் அவ்வளவு நம்பிக்கையாக இருக்கின்றீர்களா?

**ரணில்:** நான் மீண்டும் வருவதாயின் நான் தேர்தலில் போட்டியிட வேண்டும்.

**கேள்வி:** நீங்கள் அதற்குத் திட்டமிடுகின்றீர்களா?

**ரணில் :** பொருளாதாரத் துறையை நேர்சீராக்குவதையே எனது கடமையாகக் கொண்டு இங்கு (ஆஸிக்கு) வந்துள்ளேன். உங்களின் திட்டம் என்னவென்று என்னிடம் கேட்டால், திவால் நிலையில் இருந்து நாட்டை மீட்பதில் கவனம் செலுத்துவதுதான்.

– இப்படிப் பதில் அளித்தார் நரித்தந்தரசாலியான ரணில் விக்கிரமசிங்க.

தேர்தல்தொடர்பில்உங்கள்திட்டம்யாது என்பதுதான் செய்தியாளரின் கேள்வி. பொருளாதாரத்தை மீட்பதுதான் எனது திட்டம் என்று பதில் கூறும் ரணில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இன்னமும் உறுதியான முடிவுக்கு வரவில்லை என்பது இந்தப் பதிலின் மூலம் தெளிவாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஆகக்கூடியது ஏழு மாதங்கள்தான் உள்ளன. ஆனால் தான் தேர்தலில் நிற்பார் என்று பகிரங்கமாக அறிவிக்கும் துணிச்சல் அவருக்கு இன்னும் கூட வரவில்லை. தேர்தல் என்றால் அவர் ‘தொடை நடுங்கி’ என்று அடிக்கடி நான் விமர்சிக்கின்றவன். அதைத்தான், இப்போதும் – இந்த பேட்டியின் மூலமும் உறுதிப்படுத்துகின்றார் அவர்.

## தேர்தலை ஒத்தி வைக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிடார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்ற போதிலும் மக்கள் எதிர்பார்க்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் பின்னரே அதனை இல்லாதொழிக்க வேண்டும். புதிய மக்கள் ஆணையின் மூலமே அது இடம்பெற வேண்டும்.

இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணையைப் பெற முடியாது என்பதனாலேயே குறித்த தேர்தலை ஆளுந்தரப்பு இரத்துச் செய்ய எத்தனிக்கின்றது.

இதனாலேயே அரசு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் திருத்தங்களை கொண்டு வர முயற்சித்து வருகின்றது.

உண்மையான அபிலாஷையுடன் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் திருத்தங்களைக் கொண்டு வர முயற்சித்தால் நாமும் அதற்கு ஆதரவு வழங்குவோம்.

எனவே, இங்கு அவ்வாறான உண்மையான நோக்கம் இல்லை. தேர்தலை ஒத்தி வைக்கும் மறைமுகமான நோக்கம் உள்ளது.

கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்ட தமது கைப்பாவைகளைப் பயன்படுத்திக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலை ஒழிக்க வேண்டும் என்ற கருத்தை அரசதரப்பினர் பரப்பி வருகின்றனர். ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்யும் கொள்கையில் இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி, ஜனாதிபதித் தேர்தலை திட்டமிட்ட திகதியில் உடனடியாக நடத்த வேண்டும் என்று அரசுக்கு எச்சரிக்கை விடுக்கின்றது. தேர்தல்களின் பின்னர் கிடைக்கும் ஆணையின் ஊடாகவே இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை திருத்தப்பட வேண்டும்.” – என்றார்.

## புத்தளத்தில் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹாகும்புக்கடவல, செம்புக்குளிய பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர் புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செம்புக்குளிய பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய குடும்பஸ்தரே இந்தத் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

காணித் தகராறு காரணமாகவே இந்தத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஆரம்ப கட்ட பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மிருகங்களை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்தப்படும் உள்நாட்டுத் துப்பாக்கியைப் பயன்படுத்தி

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார் என்று கூறப்படும் அதே பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபர் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் மஹாகும்புக்கடவல பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மஹாகும்புக்கடவல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மாயா ரஞ்சன் தலைமையிலான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, ஆனமடுவ, தட்டேவ பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இவ் வருடம் ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா என எழுப்பப்பட்ட கேள்விக்கு ஜனாதிபதி நேரடிப் பதிலை வழங்கவில்லை.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதே தனது இலக்கு என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார்



## மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள

# இலங்கைத் துணைத் தூதரகத்துக்கு ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம்

7ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக ஆஸ்திரேலியாவின் பேர்த் நகருக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்துக்கு நேற்று கண்காணிப்பு விஜயம் செய்தார்.

தூதரகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை கொன்சல் ஜெனரல் கலாநிதி ரொஷ் ஜலக்கே மற்றும் திருமதி பிரியங்கா கமகே ஆகியோர் வரவேற்றனர்.

அதன் பின்னர், கொன்சல் ஜெனரல் மற்றும் ஊழியர்களுடன் ஜனாதிபதி சிநேகபூர்வமாக உரையாடியதுடன், இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் அவர்கள் ஆற்றக்கூடிய செயலூக்கமான பங்களிப்பு குறித்தும் விரிவான கவனம் செலுத்தப்பட்டது.

கொன்சல் ஜெனரல் கலாநிதி ரொஷ் ஜலக்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட நினைவுப் பரிசையும் வழங்கி வைத்தார்.

அதன் பின்னர் ஜனாதிபதி, துணைத் தூதரகம் மற்றும் ஊழியர்களுடன் இணைந்து குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இந்த நிகழ்வில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.












நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இந்தியாவின் நிலைப்பாடு

இது தேர்தல் ஆண்டு.

இலங்கையில் மட்டுமல்ல, அயல்நாடான இந்தியாவிலும் ஆட்சித் தலைமையைத் தீர்மானிக்கப் போகின்ற நாடாளுமன்றத் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடக்கப் போகின்றது.

தேர்தல்முடிவுகள்தொடர்பில்-அடுத்தஆட்சித் தலைமை குறித்து - இரு நாடுகளிலும் வெவ்வேறு விதமான நிலைப்பாடுகள், கருத்துக்கள் உள்ளன.

இலங்கையில் அடுத்த ஆட்சித் தலைவர் யார் என்ற போட்டி - ஓட்டம் - மிக நெருக்கமாக இருக்கின்றது. யார் வருவர் என்பதை இப்போதே கூறிவிட முடியாத நிலைமை. போட்டித்தரப்புகள் கூட இரண்டு என்பதல்ல. அதையும் தாண்டி குறைந்தபட்சம் மூன்று தரப்புகள் உள்ளன. யார் கையில் நாட்டின் தலைமை வீழும் என்று இப்போதே கணிப்பிடவோ, எதிர்வு கூறவோ முடியாத நிலைமை.

ஆனால், இந்தியாவில் நிலைமை அப்படி இல்லை. கடந்த பத்து வருடங்களாக அதிகாரத்தில் இருக்கும் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அப்பதவியில் தொடர்வார் என்று நம்பகமாக எதிர்பார்க்கப்படுகின்றது. கருத்துக்கணிப்புகளும் எதிர்வுகூறல்களும் அதனை உறுதிப்படுத்துகின்றன.

ஆகவே, தேர்தலின்பின்னரும்தாம்அதிகாரத்தில் தொடர்வதை ஸ்திரப்படுத்தி, உறுதிப்படுத்திக் கொண்டிருக்கும் இந்தியாவின் தற்போதைய அரசுத் தலைமை அந்தப் பின்புலத்தில் தனது அயலுறவுக் கொள்கைகள், போக்குகள் குறித்து சிந்திக்கத்தலைப்பட்டிருக்கின்றது.

இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சிக்கால வெளிவிகாரக் கொள்கையும், அணுகுமுறையும், அப்போதிருந்த உலக ஒழுங்கு முறையும் வேறு. இப்போது கடந்த 10 ஆண்டு காலமாக பிரதமர் நரேந்திர மோடி அரசின் ஆட்சி காலத்தில் நிலவும் உலக ஒழுங்கு வேறு.

70 களிலும் 80 களிலும் பிராந்திய அரசியலில் இந்தியாவின் வகி பாகம் மிகவும் வலிமை மிக்கதாக இருந்தது. பக்கத்தில் இருந்த தனது பாரம்பரிய எதிர்த் தேசமான பாகிஸ்தானுடன் நேரடியாக முரண்டு பிடித்து, மோதி, தன் படைகளை அனுப்பி, அந்த நாட்டை பாகிஸ்தான் - வங்காளதேசம் என்று இரண்டு நாடுகளாகப் பிரிக்கும் அதிகாரம் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியிடம் இருந்தது.

அதன்பின்னர் 16 ஆண்டுகள் கழித்து, அவரின் மகன் ராஜீவ் காந்தி பிரதமர் கதிரையில் இருந்து கொண்டு, அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்குள் தனது நாட்டின் ஒரு லட்சத்துக்கு அதிகமான படைகளை இறக்கி, இலங்கையில் தமிழர் தேசத்தை இரண்டரை ஆண்டுகள் ஆக்கிரமித்து நிற்க முடிந்தது.

இப்போது அத்தகைய உலக ஒழுங்கு இல்லை.

பாரம்பரிய வைரியான பாகிஸ்தான் இராணுவரீதியிலோ, பயங்கரவாத அமைப்புகளின் முகமூடியிலோ ஏதேனும் குசும்புத்தனம் பண்ணினால், ஆகக்கூடியது 'சேர்ஜிக்கல் ஸ்ட்ரைக்' போன்ற சில அதிரடி இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுக்கலாம். அதற்கு மேல் வலிமையை - மேலாதிக்கத்தை - பலத்தைக் காட்டி, அயல் தேசங்களை இந்தியா அடக்க முடியாது.

அத்தகைய மேலாதிக்கத் தந்திரத்தை இந்தியா இப்போது கையாள முயன்றால், மாலைதீவு போல பிற அயல்தேசங்களும் தமக்குக் கவசமாக - இந்தியாவுக்கு அயல் தேசமாக தலையீடு தரும் பலம் வாய்ந்த சீனாவை பயன்படுத்தி - அதன் நிழலில் போய் ஒதுங்கிக் கொள்ளும் சூழல் உண்டு.

அத்தகைய நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்வதுதான் இன்றைய நிலையில் இந்தியாவின் பிரதான அயலுறவுக் கொள்கைக் கோட்பாடாக உள்ளது.

மாலைதீவில் சற்று அஜாக்கிரதையாக - அசிரத்தையாக - இருந்தமையால் இந்திய ஆதரவு சக்திகள் அதிபர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு, சீன ஆதரவுத் தரப்பின் கை ஓங்கி விட்டதாக புதுடில்லி கருதுகின்றது. அதனால் தனது நாட்டு பாதுகாப்பு ரீதியில் நெருக்கடிகளை - சிக்கல்களை - எதிர்கொள்ளும் ஆபத்து உருவாகி வருவதாகவும் புதுடில்லி உணர்கின்றது.

தனது கடல் எல்லை அயல்தேசமான மாலைதீவில் நிகழ்ந்து விட்ட அந்தப் பின்னடைவு, மற்றைய கடல் எல்லை அயல் தேசமான இலங்கையில் நடந்து விடக் கூடாது என்பதில் புதுடில்லி மிகக் கரிசனையாக - எச்சரிக்கையாக - அவதானத்துடன் உள்ளது.

இலங்கை ஜனாதிபதி தேர்தல் அந்த நாட்டின் உள்விவகாரம் என்றாலும், அதில் வெல்பவர் - அதன் மூலம் அதிகாரத்திற்கு வருபவர் - யாராக இருந்தாலும், அவர் இந்தியாவைப் புறந்தள்ளி, சீனச் சார்பானவராகி விடக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவதில் புதுடில்லி மிக முனைப்பாக நிற்கின்றது. இந்தியாவின் அந்தப் போக்கை வெளியில் இருந்து தவறு என்று நாம் கூறி விடவும் முடியாது.

அதனால்தான் இந்திய விரோதப் போக்குக் கொண்ட ஜே.வி.பியின் தலைமையை வெற்றிலை வைத்து அழைத்து அதை புதுடில்லி உபசரிக்கின்றது.

கொழும்பைத் தாஜா பண்ணுவதற்காக - அந்த ஒரே இலக்குக்காக - தமிழர் நலனைக் கூட இந்தியா புறந்தள்ளி விடலாம். அந்த ஆபத்தை முற்கூட்டியே நாம் புரிந்து செயல்படுவது தமிழர் தரப்புக்கு நல்லது.

# சமூக ஒற்றுமைக்கு ஓர் அற்புதமான எடுத்துக்காட்டுதான் ராமர் கோயில்

## அமித் ஷா மக்களவையில் பெருமிதம்



"அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டது, சமூக ஒற்றுமைக்கும், கலாச்சார மறுமலர்ச்சிக்கும் ஓர் அற்புதமான எடுத்துக்காட்டு."

– இவ்வாறு மக்கள்வையில் உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

அயோத்தி ராமர் கோயில் குறித்து மக்களவையில் விதி எண் 193-ன் கீழ் நேற்று நடைபெற்ற விவாதத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பங்கேற்று உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பல ஆண்டுகளாக நீதிமன்ற ஆவணங்களில் இருந்த இந்த வழக்கு, நரேந்திர மோடி பிரதமரான பின்னர் வெளிப்பாடு பெற்றது. எனது எண்ணங்களையும் நாட்டு மக்களின் குரலையும் இந்த சபையில் முன்வைக்க விரும்புகிறேன்.

2024 ஜனவரி 22 ஆம் ஆம் 10,000 ஆண்டுகளுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாக இருக்கப் போகிறது. 1528 ஆம் ஆண்டில் தொடங்கிய அநீதிக்கு எதிரான போராட்டத்தின் முடிவை இந்த ஜனவரி 22 குறிக்கிறது. ஜனவரி 22 ஆம் திகதி ஒட்டுமொத்த இந்தியாவின் ஆன்மிக உணர்வின் மறுமலர்ச்சி நாள். அது மகத்தான இந்தியாவின் பயணத்தின் தொடக்கம். 1528 முதல் 2024 ஆம் ஆண்டு வரை ஸ்ரீராமர் கோயிலுக்காக போராடிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

கடவுள் ராமர் மற்றும் ராம சரித்திரம் இல்லாமல் இந்தியாவை கற்பனை செய்து பார்க்க முடியாது. இந்த நாட்டை அறிந்து கொள்ளவும், உணரவும் விரும்புவோர், கடவுள் ராமர் மற்றும் ராம சரிதம் இல்லாமல் அதை அடைய முடியாது. கடவுள் ராமரின் குணமும், கடவுள் ராமரும் இந்த நாட்டு மக்களின் ஆன்மா. கடவுள் ராமர் இல்லாத இந்தியாவை கற்பனை செய்பவர்களுக்கு இந்தியாவை தெரியாது. அவர்கள் அடிமை சகாப்தத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

ராம ராஜ்ஜியம் என்பது எந்தவொரு குறிப்பிட்ட மதத்துக்கோ அல்லது பிரிவுக்கானதோ அல்ல. ஒரு சிறந்த அரசு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான அடையாளமாக அது உள்ளது. இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலகிற்கும் ஒரு சிறந்த அரசு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான அடையாளம் அது." – என்றார்.

# பிரதமர் மோடியுடன் ஆந்திர முதல்வர் சந்திப்பு

பிரதமர் நரேந்திர மோடியை, ஆந்திர மாநில முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி டில்லியில் சந்தித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பு ஆந்திர அரசியலில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி, நேற்று முன்தினம் டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினார்.

சுமார் அரை மணி நேரம் இந்த சந்திப்பு நீடித்துள்ளது. இதில், ஆந்திர மாநில பிரிவினை மசோதாவில் குறிப்பிட்டுள்ள நிதி, சிறப்பு அந்தஸ்து, தெலுங்கானா மாநிலத்தில் இருந்து வரவேண்டிய நிதி நிலுவை குறித்து இருவரும் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர்.

மேலும், தற்போதைய ஆந்திர அரசியல் நிலைமை, தேர்தல் நிலவரம், காங்கிரஸில் அவரது தங்கை ஒய்.எஸ். ஷர்மிளாவின் இணைவு, தெலுங்கு தேசம் – ஜனசேனா கூட்டணி போன்ற விடயங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, நிர்மலா சீதாராமன் ஆகியோரையும் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி சந்தித்து பேசியுள்ளார்.

ஜெகன் மோகன் ரெட்டியின் இந்த சந்திப்பால் ஆந்திர அரசியல் கூட்டணியில் சில மாற்றங்கள் நிகழலாமென கூறப்படுகிறது. எனவே, ஆந்திர முதல்வரின் டில்லி பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இதேவேளை, மக்களவைத் தேர்தலுக்கு ஆந்திர தேர்தல்



களம் தயாராகி வருகிறது. கடந்த தேர்தலை பா.ஜ.க. தனித்து சந்தித்தது. ஓர் இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. ஆனால், இம்முறை பிரதான ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் இரண்டும் பா.ஜ.கவுடன் கூட்டணி வைக்க தீவிரம் காட்டி வருகிறன.

ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சி மற்றும் ஒய்.எஸ். ஆர் காங்கிரஸ் என இரு கட்சிகளுடன் நெருக்கத்துடன் இருக்கிறது பாஜக. இதனால், யாருடன் கூட்டணி வைப்பது என்னும் குழப்பத்தில் பா.ஜ.க. தலைமை இருக்கிறது என சொல்லப்பட்டு வந்தது.

இந்த நிலையில், தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திர பாபு நாயுடு டில்லியில் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் பா.ஜ.க. தலைவர் நட்டா ஆகியோரைச் சந்தித்து பேசியுள்ளார்.

# மோடி மீண்டும் பிரதமராகுவதற்கு ஓ. பன்னீர்செல்வம் விரும்புகிறார்

"பிரதமரின் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார் ஓ. பன்னீர்செல்வம். மோடி மீண்டும் பிரதமராக வரவேண்டும் என அவர் விரும்புகிறார்."

– இவ்வாறு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"ஏனைய கட்சிகளின் உட்கட்சி பிரச்சினைகளில் பா.ஜ.க. எப்போதும் தலையிடாது என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். பிரதமரின் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார் ஓ.பி.எஸ். கூட்டணி தொடர்பாக முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். கூறுவது அவரது தனிப்பட்ட கருத்து. மோடி மீண்டும்

## அண்ணாமலை கருத்து

பிரதமராக வரவேண்டும் என ஓ.பன்னீர்செல்வம் விரும்புகிறார். அதற்கு அவருக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இன்று சென்னையில் நடைபெறவிருக்கும் 'என் மண் என் மக்கள்' யாத்திரை பொதுக்கூட்டத்தில் ஜே.பி.நட்டா பங்கேற்கிறார். சென்னையில் நாங்கள் கெட்ட பெயர் வாங்க விரும்பவில்லை. 'என் மண் என் மக்கள்' நடைப்பயணத்தால் பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். இன்று சென்னை வரும் பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா தலைமையில் ஆலோசனை மேற்கொள்ளப்படும்." – என்றார்.

# பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் மோசடி: விசாரணைக்கு பல நாடுகள் வலியுறுத்தல்





பாகிஸ்தான் பொதுத் தேர்தல் மோசடிகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை வலியுறுத்தியுள்ளன.

பாகிஸ்தானின் தேசிய அவை மற்றும் மாகாண அவைகளுக் கான தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது. காலை 8 மணிக்குத் தொடங்கிய தேர்தல் மாலை 5 மணிக்கு முடிவடைந்தது.

இதனையடுத்து, வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. நேற்று மாலை 5 மணி வரை 253 இடங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் இன்சாப் கட்சி 92 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி 71 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. மற்றவர் கள் 36 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர். அறுதிப் பெரும்பான் மைக்கு 133 இடங்களில் வெற்றி பெற வேண்டும் எனும் நிலையில், எந்த கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெரும் நிலையில் இல்லை. இதனால், நவாஸ் ஷெரீப்பும் பிலாவல் பூட்டோவும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்க திட்டமிட் டுள்ளார்கள்.

இந்த நிலையில், தேர்தல் முடிவுகள் குறித்து சிறையில் இருந்தவாறு கருத்து தெரிவித்த இம்ரான் கான்,

“நவாஸ் ஷெரீப்பின் லண்டன் திட்டம் பலிக்கவில்லை. பாகிஸ்தானியர்கள் எவரும் அவரை நம்பவில்லை. இப் போது மக்கள் அனைவரும் தங்கள் வாக்கின் வலிமையை உணர்ந்திருப்பார்கள். அதை உணர்ந்த கையோடு தங்கள் வாக்குகளை பாதுகாக்கவும் அவர்கள் முயல வேண்டும். மக்களாகிய நீங்கள் எனது நம்பிக்கையை மெய்ப்பித்து விட்டீர்கள். பி.டி.ஐ.கட்சி அழகான வெற்றியைப் பெற்றுள்ளது. அதற்கு உதவிய மக்களுக்கு நன்றி” என தெரிவித்துள் ளார்.

இம்ரான் கான் சிறையில் அடைக்கப்பட்டு, அதன் காரண மாக அவரை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட விடாமல் தடுத்து, அவரது கட்சியையும் முடக்கி இந்த தேர்தல் நடத்தப்பட்டிருப்ப தால் இது சமமான போட்டி கொண்ட தேர்தல் அல்ல என்ற குற்றச்சாட்டை பி.டி.ஐ. முன்வைத்துள்ளது.

அத்துடன், இராணுவத்தின் ஆதரவோடு நவாஸ் ஷெரீப் தேர்தலை எதிர்கொண்டார் எனவும் பல இடங்களில் முறை கேடாக அக்கட்சி வெற்றி பெற்றதாகவும் பி.டி.ஐ. குற்றம் சாட்டியுள்ளது.

இந்த நிலையில், இந்தத் தேர்தல் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம்,

“இந்த தேர்தலில் சமநிலை போதுமான அளவில் இல்லை. முக்கிய பிரமுகர்கள் சிலர் போட்டியிட முடியாத நிலை இருந்தது. மேலும், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், பேச்சு சுதந்திரம், இணைய சேவை ஆகியவற்றுக்கு கட்டுப்பாடுகள் இருந்துள் ளன” என விமர்சித்துள்ளது.

# காசாவில் வான்வழித் தாக்குதல்: 10 குழந்தைகள் உள்பட 28 பேர் பலி



காசாவின் ரஃபா நகரத்தின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில்10 குழந்தைகள் உள்பட 28 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை காசா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தப் போரில் இதுவரை 28 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர் என காசா சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. அவர்களில் பெரும்பாலோர் பெண்கள் மற்றும் சிறார்கள் ஆவர்.

காசாவின் மொத்த மக்கள் தொகையில், பெரும்பாலான வர்கள் போர் காரணமாக தங்கள் வீடுகளை விட்டு வெளி யேறி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் தெற்கு காசாவில் உள்ள ரஃபா நகரத் தில் தஞ்சமடைந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இஸ்ரேல் இராணுவம் காசாவில் வான்வழி மற்றும் தரை வழித் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகிறது. எகிப்து எல்லையில் அமைந்துள்ள ரஃபா நகரத்தில் ஹமாஸ் அமைப்பினர் பதுங்கியிருக்கின்றனர் எனவும் அங்குள்ள பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், காசாவின் ரஃபா நகரத்தின் மீது இஸ் ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 10 குழந்தைகள் உள்பட 28 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு அமெ ரிக்கா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல், ரஃபா மீது படையெடுத்திருப்பது மனிதாபிமான பேரழிவிற்கு வழிவகுக்கும் என்று அமெரிக்க அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.



# 2024 வாக்காளர்கள் பட்டியலில் பெயர்களைப் பதியக் கோரிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் தாமதமின்றி தமது பெயர்களை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சவன் சிறரத்நாயக தெரிவித்துள்ளார்.

18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்ய வேண்டும்.

நிரந்தர வதிப்பிடத்தை மாற்றாது திருமணம், கல்வி உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக வதிப்பிடத்தை மாற்றிய அனைவரும் வாக்காளர் இடாப்பில் தங்களது பெயர்களை பதிவிடுவதுடன், குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் வசிக்கும் பட்சத்தில் அவர்கள் வாக்களிக்கா முடியா விட்டாலும், அவர்களின் பெயர்களையும் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.




# ஹெல்மெட்டுக்குள் மறைத்து எடுத்து வந்து ஐஸ் போதைப் பொருளை விற்றவர் கைது!

ஹெல்மெட்க்குள் ஐஸ் போதைப் பொருளை மறைத்து வைத்து, ஆலயப் பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்ட நபர் ஒருவர் குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

மன்னார் சாவற்காடு புனித அந்தோனியார் ஆலயப் பகுதியில் தலையில் ஹெல்மெட் அணிந்திருந்த நபரை பொலிஸார் சோதனை செய்தபோது ஹெல்மெட்க்குள் ஐஸ் போதைப் பொருள் இருக்கக் கண்டுப் பிடிக்கப் பட்டுள்ளது.

மன்னார் விடத்தல்தீவைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வளர்ப்பிடமாகவும் கொண்ட 31 வயதுடைய நபர் ஒருவரே 20 கிராம் 850 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்

இச் சந்தேக நபர் விடத்தல்தீவிலிருந்து மன்னாருக்கு இதனை வியாபாரத்துக்குக் கொண்டு வந்தார் என ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது.




# தமண விபத்தில் 4 பேருக்குக் காயம்

(கே.எ.ஹமீட்)

அம்பாறை மாவட்டம் அம்பாறை – சியம்பலாண்டுவ பிரதான வீதியில் தமண பொலிஸ் நியாயாதிக்க பகுதியிலுள்ள குருட்டுகந்த எனும் பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகனவிபத்தில் நான்கு பேர் காயமடைந்தனர். அவர்கள் தமண வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

விபத்தில் சிக்கியவர்கள் கடந்த மூன்றாம் திகதி திருணமான அட்டாளைச்சேனையைச் சேர்ந்த மணமகனையும், திக்வல்லையைச் சேர்ந்த தமது மகளையும் பார்த்து தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் சக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளவென திக்வல்லையிலிருந்து வருகை தந்த உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விசாரணைகளை தமண பொலிஸ் மேற்கொண்டு வருகிறார்கள்.





# நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யாத வர்த்தகர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவர்

நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யாத வர்த்தகர்களை கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பெரும்போகத்தில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல் சேகரிப்பாளர்கள் மற்றும் நெல் களஞ்சியசாலை உரிமையாளர்கள் நெல் கொள்வனவை ஆரம்பித்துள்ளனர்.

அதற்காக பல அரச மற்றும் வணிக வங்கிகள் மூலம் வர்த்தகர்களுக்கு மானிய வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளை கவனத்தில் கொண்டு நிர்ணய விலையும் அறிவிக்கப்பட்டுள்ளது.




எவ்வாறாயினும், வர்த்தகர்கள் கடன் வசதிகளையும் பெற்றுக்கொண்டு, விவசாயிகளிடம் இருந்து நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யாவிட்டால், அவர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நெல் கொள்வனவு திட்டத்தில், சலுகை வட்டி வீதத்தை பெற்றுக் கொடுக்க 900 கோடி ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை பெரும்போகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்யாமல் இருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ள போதிலும் தனியார் பிரிவினர் நெல்லை கொள்வனவு செய்ய வேண்டிய குறைந்த பட்ச விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிதி அமைச்சின் முழுமையான மேற்பார்வையின் கீழ் நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# நாட்டின் சுதந்திரம், விடிவுக்கு முஸ்லிம்கள் ஆற்றிய சேவைகள் மறக்கப்படவே கூடாது

## ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான் வலியுறுத்து



அந்நியர்களிடம் இருந்து சுதந்திரத்தை பெறவும், 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவும் முஸ்லிம்கள் நாட்டுக்கு மேற்கொண்ட தியாகங்கள் மறக்கப்படக் கூடாது என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான் தெரிவித்தார்.

இவர் நேற்று சனிக்கிழமை இது தொடர்பாக கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தவை வருமாறு:-

ஆங்கிலேயர்களிடம் இருந்து நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்று கொடுப்பதற்கு தேச பக்தர்களான முஸ்லிம்கள் மிகக் காத்திரமான பங்களிப்புகளை வழங்கி உள்ளனர். மூவினங்களும் சேர்ந்து போராடித்தான் தாய்நாட்டுக்கு சுதந்திரம் பெறப்பட்டது.

அன்றைய ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தால் துரோகிகள் என்று இவர்கள் முத்திரை குத்தப்பட்டனர். ஆனால் எமது நாடும், மக்களும் இவர்களை சுதந்திர போராட்ட வீரர்களாகக் கொண்டாட வேண்டியது தலையாய கடப்பாடு, நன்றி கடனும் ஆகும்.

ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சியில் பங்கேற்ற சிங்களப் புத்திரர்களை மாத்திரம்தான் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது சுதந்திர போராட்ட வீரர்களாக வர்த்தமானியில் பிரகடனம் செய்து கபட நாடகம் நடத்தினார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்த முஸ்லிம் தலைவர்கள் இதற்கெதிராக வாய் திறக்கவே இல்லை. அவர்கள் கண் இருந்தும் குருடர்களாக, வாய் இருந்தும் ஊமைகளாக, காதிருந்தும் செவிடர்களாக நடந்து கொண்டிருந்தனர்.

30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவும் முஸ்லிம்கள் ஏராளமான தியாகங்களை மேற்கொண்டனர். அவையும் மறக்கடிக்கப்பட்டு, மழுங்கடிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. சஹ்ரான் கும்பலால் மாறாத களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. - என்றார்.




# மன்னார் தீவு மக்களை கொன்ற பின்னர்தான் காற்றாலைத் திட்டத்தை முன்னெடுக்கலாம்!

## அதிகாரிகள் கூட்டத்தில் பிரஜைகள் தரப்பு தெரிவிப்பு

மன்னார் தீவில் மின் உற்பத்திக்கான காற்றாலை அமைப்பது தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து ஆராய்வதற்காகவும் ஜனாதிபதியின் நிலையான ஆற்றல் முயற்சிகள் தொடர்பான திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகவும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோ தலைமையில் பல திணைக்களங்களின் தலைவர்கள் கொண்ட ஒரு குழுவினர் நேற்று முன்தின்ம் வெள்ளிக்கிழமை (09) மன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டனர். மன்னார் தீவில் மேலும் காற்றாலைகளை அமைப்பது தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் பொது அமைப்புப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு ஆளுநர் சபையினர், மன்னார் அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், மாவட்ட பொது அமைப்பின் பிரதிநிதிகள் என முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மன்னார் தீவில் தொடர்ந்தும் காற்றாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்த போது மன்னார் அமைப்பக்களின் பிரதிநிதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

மன்னாரில் காற்றாலை அமைப்பதைத் தாங்கள் எதிர்க்கவில்லை எனத் தெரிவித்துள்ள மன்னார் மாவட்ட பிரதிநிதிகள் இவற்றை மன்னார் தீவுக்கு அப்பால் நிர்மாணிக்கும்படியும் தெரிவித்தனர்.

மன்னார் தீவில் இக்காற்றாலை அமைக்கும் திட்டம் தொடருமாகில் மன்னார் தீவு மக்களைக் கொன்றுவிட்டே நீங்கள் இத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டி வரும் என இக்கூட்டத்தில் கலந்து கொண்டோர் வலியுறுத்தினர்.

இந்த நிலையில், மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர் பிரதேச செயலகப் பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள 250 மெகாவற் காற்றாலை சக்தி திட்டத்தின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டறிக்கையை முப்பது நாள்களுக்குள் எழுத்து மூலம் தெரிவிக்கும்படி மன்னார் மக்களுக்கு தற்பொழுது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# அனுரகுமாரவின் டில்லிப் பயணம் சொல்லும் செய்தி!



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவின் இந்தியாவுக்கான பயணம் தென் இலங்கையில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்திய மத்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், அனுரகுமார உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் இந்த வார ஆரம்பத்தில் புதுடில்லி சென்றனர். அங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் உள்ளிட்டவர்களுடனான சந்திப்பிலும் ஈடுபட்டார்கள். இந்தியாவுக்கான ஐந்து நாள் பயணத்தை முடித்துக் கொண்டு வரும் வழியில் கேரளா சென்று அம்மாநில தொழிற்துறை அமைச்சர் ராஜியையும் சந்தித்து வந்திருக்கிறார்கள்.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) சிவில் சமூக அமைப்புக்கள் சிலவற்றையும், கல்வியாளர்களையும் புதிதாக இணைத்துக் கொண்டு தேசிய மக்கள் சக்தியாக உருமாறி கடந்த ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் எதிர்கொண்டது. ஜே.வி.பி.யில் கடந்த கால ஆயுத வன்முறை அடையாளத்தில் இருந்து விலகிக் கொள்ளும் நோக்கிலேயே, அனுரகுமாரவும் அவருக்கு ஆலோசனைகளை வழங்கும் புலமையாளர்களும் தேசிய மக்கள் சக்தி என்ற நாமத்துக்குள் புகுந்து கொண்டார்கள். புதிய நாமமும், அடையாளமும் எதிர்பார்த்ததைவிட தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மத்தியில் அபிமானத்தை பெற்றுக் கொடுத்திருக்கின்றது என்று தென் இலங்கை களநிலவரங்களைப் பிரதிபலிக்கும் இரகசிய ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. அதுவும், ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்பும் (அரகலய) போராட்டம் முழு நாட்டையும் உலுக்கிய போது, அந்தப் போராட்டத்தில் கணிசமான பங்கினை தேசிய மக்கள் சக்தியும் வகித்தது. அதுவும், தென் இலங்கையில் கிராமங்களில் மத்திரமல்ல, நகரங்களிலும் தேசிய மக்கள் சக்தியின் ஒருங்கிணைப்பின் பின்னாலான போராட்டங்களில் மக்கள் கணிசமாகத் திரண்டார்கள். அந்தத் திரட்சியை குலையாமல் அனுரகுமார இன்றும் பேணுகிறார் என்பது கருத்துக்கணிப்புக்களில் வெளிவரும் தகவல். இதனால், எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மிகப்பெரிய தாக்கத்தைச் செலுத்தும் என்பது எதிர்பார்ப்பு.



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் ஆட்சி அதிகாரத்துக்கான அரசியல் என்பது, "ஐக்கியதேசியக்கட்சிஆதரவுஎதிர் எதிர்ப்பு" என்றவாறாக இருந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் வரை அதுதான் நிலைமை. ஆனால், அதன் பின்னரான பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரதித் தலைவராக இருந்த சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான முறுகல்களை அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்த சஜித் அணியினர் ஐக்கிய மக்கள் சக்தியை அமைத்

தொடர்ச்சி ▼





# அனுரகுமாரவின் டில்லிப் பயணம் சொல்லும் செய்தி!

தொடர்ச்சி▲

தனர். பிரதான எதிர்க்கட்சியாகவும் மாறினர். சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்த முறு கல்களை அடுத்து ராஜபக்ஷக்கள் தோற்றுவித்த பொதுஜன பெரமுனவும், ஐ.தே.க.வில் இருந்து சஜித் அணியினரால் தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியும், கிட்டத்தட்ட புதிய நாமங்களைச் சூடிக்கொண்ட ஐ.தே.கவும், சுதந்திரக் கட்சியும் என்று கொள்ளலாம். அதன் போக்கில்தான், ஜே.வி.பி.யும் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட சிலரின் விலகலோடு தேசிய மக்கள் சக்தியாக மாறியது. ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்பன இருமுனைப் போட்டியாகவே இருந்து வந்திருக்கின்றன. ஆனால், இம்முறை மும்முனைப் போட்டிக்கான களம் விரிந் திருக்கின்றது.

காலியான கூடாரமாக இருக்கும் ஐ.தே.கவும், ராஜபக்ஷக்களும் ஓரணியில் நின்று ரணிலை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் முன்னிறுத் தப்படுகிறார். அதேவேளை தேசிய மக்கள் சக்தி வழக்கத்தைவிட அதிக வலுவோடு இந்த ஜனாதி பதித் தேர்தலை எதிர்கொள்கின்றது. அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அனுரகுமார முன்னிறுத்தப்படுகிறார். இருமுனைப் போட்டி யில் இருந்து பிரதான தேர்தலொன்று மும்முனைப் போட்டியாக மாறுவது என்பது பல நேரங்களில் ஆச்சரியங்களை நிகழ்த்தக்கூடியது. குறிப்பாக, "ரணில் எதிர் சஜித்" என்ற நிலை மாறி, "ரணில் எதிர் சஜித் எதிர் அனுர" எனும் நிலையில் வாக்குப் பிரிவு, மிதக்கும் வாக்குகளின் இறுதிக் கட்டத் திரட்சி ஆகியன சிலவேளை அனுரகுமாரவை முதன்மை இடத்துக்கு நகர்த்திவிடும் வாய்ப்புக்கள் இருப்பதான எதிர்பார்ப்புக்களும் தென் இலங்கையில் இருக் கவே செய்கின்றன. இந்த எதிர்பார்ப்புக்கள்தான், இந்தியாவை தேசிய மக்கள் சக்தியை நோக்கி தன்னுடைய கரங்களை நீட்ட வைத்திருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் ஆச்சரியங்கள் நிகழ்ந்து அனுரகுமார சிலவேளை ஜனாதிபதியாகிவிட்டால், அதன் பின்னர் இலங்கையின் புதிய ஆட்சியாள ருடன் தொடர்புகளை ஆரம்பிப்பதைவிட, முன்னரே சந்திப்புக்களை நடத்தி வைத்துக் கொள்வது நல்லது என்பது இந்தியாவின் நிலைப்பாடு. அதற்காகத் தான் உத்தியோகபூர்வ அழைப்பை தேசிய மக்கள் சக்தியை நோக்கி இந்தியா விடுத்திருக்கின்றது.

வழக்கமாக இடதுசாரிய சித்தாந்தத்தைப் பேணுவதாக கூறிக் கொள்ளும் தேசிய மக்கள் சக்தி, சீனா ஆதரவு நிலைப்பாடோடு இருந்து வந்திருக் கின்றது. இந்தியாவைக் கடுமையாக எதிர்த்தும் வந்திருக்கின்றது. இலங்கையில் ஆக்கிரமிப்பு முனைப்புக்களை இந்தியா முன்னெடுப்பதாகத் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டியும் போராட்டங்களை யும் தேசிய மக்கள் சக்தி நடத்தியிருக்கின்றது. அடிக்கடி சீனாவின் அழைப்பை ஏற்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் செல்வது வழக்கம். அவர்கள் இந்தியா செல்வது என்பது, இந்தியாவின் இடதுசாரி கட்சிகள் மற்றும் இயக்கங்களில் நிகழ்வு களில் பங்குபற்றுதல் என்ற அளவிலேயே இருந் திருக்கின்றது. ஆனால், இம்முறை இந்திய வெளிவிவகார அமைச்சர், தேசிய மக்கள் சக்தியின ரைச் சந்திக்கிறார். அத்தோடு, தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் சந்திப்புக்களை நடத்தியிருக்கிறார் என்பது, இந்தியா தேசிய மக்கள் சக்தியை பிரதான சக்தியாக உணர்ந்ததன் விளைவாக நடந்திருப்பது. அதுவும் இந்தியாவின் வெளிவிவகாரம், பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய முடிவுகளை எடுக்கும் நபர்களாக வும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நெருக்கமான வர்களாகவும் இருக்கும் எஸ்.ஜெய்சங்கரும், அஜித் தோவாலும் அனுரகுமாரவை சந்தித்தமை என்பது கவனிக்கத்தது.

அனுரகுமார இந்தியா சென்றமை, ஐக்கிய மக்கள் சக்தியை கலக்கமடைய வைத்திருக்கின் றது. ஏனெனில், இந்தியா போன்ற பிராந்திய வல்லரசு தேவையற்று எந்தவொரு அமைப்புக்கும் முக்கியத்துவம் வழங்காது. அப்படிப்பட்ட சூழலில், இந்தியா அனுரகுமாரவுக்கான முக்கியத்துவத்தை, நீண்ட ஆய்வுகள், புலனாய்வு அறிக்கைகளின் பின்னணியில்தான் வழங்கியிருக்கும் என்பது உணர்நிலை. அது, தென் இலங்கை மக்களிடம் தேசிய மக்கள் சக்தி மீதான ஆதரவை மறைமுக மாக அதிகரிப்பதற்கும் உதவலாம். இதனால், அனுரகுமாரவை "ரணில் ராஜபக்ஷக்களின்"

தொடர்ச்சி▼

# அனுரகுமாரவின் டில்லிப் பயணம் சொல்லும் செய்தி!

தொடர்ச்சி ▲

ட அணியாக முன்னிறுத்தும் வேலைகளில் ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்திருக்கின்றது. மறுபுறம், ஐக்கிய மக்கள் சக்தியை சந்திப்புக்கு அழைக்க வேண்டும் என்று சஜித் இந்தியாவிடம் கோரியிருக்கிறார். அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதந் தெரிகின்றது.

வழக்கமாக சீனா ஆதரவுடன் இயங்கும் ஜே.வி.பிக்கு தேசிய மக்கள் சக்தி என்ற அடையாள மாற்றம் தென் இலங்கை அரசியலிலும் பிராந்தியத்திலும் முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றது என்பது, அதன் மேலான இடதுசாரி அடையாளத்தை மெதுவாக இழக்க வைக்கத் தொடங்கியிருக்கின்றது. ஆயுத வன்முறை அடையாளத்தைத் தாண்டுவதற்காக புதிய நாமத்துக்குள் சென்ற தேசிய மக்கள் சக்திக்கு, இடதுசாரி அடையாள இழப்பும் சேர்ந்தே நடைபெற ஆரம்பித்திருக்கின்றது. அது, நவதாராளவாதிகள் என்ற நிலையை நோக்கிய நகர்வை வேகப்படுத்தியிருக்கின்றது. இது, தென் இலங்கையின் மத்திய தர வர்க்கத்தினரை தேசிய மக்கள் சக்தியை நோக்கி திரளச் செய்யலாம். ஆனால், தேசிய மக்கள் சக்தியின் கூட்டங்களில் சேரும் மக்கள் கூட்டம் வாக்குகளாக மாறுவதில்லை என்ற நிலை இருக்கின்றது. அதற்கு அந்தக் கட்சி மீது மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை என்பது மாத்திரம் காரணமல்ல. மாறாக, அந்தக் கட்சியை யார் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள், அந்தக் கட்சியின் பின்னணி என்பன எல்லாம் காரணமாக இருந்திருக்கின்றன.

தமிழ்ச் சூழலில் எப்படி சாதியவாதம் அதிகாரம் செலுத்துகின்றதோ, அதே அளவுக்கு தென் இலங்கையிலும் கொவிகம – பௌத்த மேலாதிக்கம் என்பது, அரசியல் அதிகாரங்களை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கின்றது. அது, கொவிகம – பௌத்த அடையாளங்களுக்கு அப்பால் அதிகாரங்களையோ ஆட்சியையோ பெரும்பாலும் அனுமதிப்பதில்லை. அதனால்தான் தென் இலங்கை அரசியலில் கொவிகம – பௌத்த மேலாதிக்கத்தை பிரதிபலிக்கும் ஐ.தே.க.வும் சுதந்திரக் கட்சியும் ஆட்சியின் சக்திகளாக விளங்கியிருக்கின்றன. இந்த இரு கட்சிகளில் ஒன்று தவறினால் மற்றையதைத் தெரிவு செய்யுமாறுதான் தென் இலங்கையின் சிறுசிறு கிராமங்களில் இருக்கும் விகாரைகள் முதல், பௌத்த பீடங்கள் வரையில் பேணப்படும் அணுகுமுறை. தமிழ்ச் சமூகத்தின் ஆலயங்கள் செலுத்தும் தாக்கத்தினைவிட தென் இலங்கையில் விகாரைகள் செலுத்தும் ஆளுமை அதிகமானது. கிராமங்கள், பிரதேசங்களின் முடிவுகள் கூட விகாரைகளுக்குள் கூடி எடுக்கப்படுகின்றன. இதனால், இலங்கையின் பௌத்த மேலாதிக்க வரலாறு என்பது கொவிகம சாதியினரால் நிகழ்ந்தது. அதனால், வறிய பிற்படுத்தப்பட்ட மக்களின் விடுதலைக் குரலாக ஆரம்பத்தில் எழுந்த ஜே.வி.பி. தென் இலங்கையின் ஆதிக்க சக்திகளினால் தீண்டத்தகாத தரப்பாக பார்க்கப்பட்டது. ஜே.வி.பி.யின் கிளர்ச்சிகள் தென் இலங்கையின் ஆட்சியாளர்களினால் படுமோசமான படுகொலைகள் நிகழ்த்தப்பட்டே அடக்கப்பட்டது. அதன்போது, வர்க்க பேதமும் சாதிய மேலாதிக்கவாதமும் தென் இலங்கையில் தலைவிரித்தாடியது. அப்படியான சூழலில் ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தியாக மாறிய நிலையிலும், கொவிகம – பௌத்த மேலாதிக்கத்தைத் தாண்டி தென் இலங்கை மக்கள் அனுரகுமாரவை ஜனாதிபதியாக மாற்றுவதற்கான வாய்ப்புக்கள் அவ்வளவுக்கு இல்லை என்றே இந்தப் பத்தியாளர் நம்புகிறார். ஆனால், பொதுத் தேர்தலில் சுமார் 30க்கு அண்மித்த ஆசனங்களை வென்று முக்கிய எதிர்க்கட்சியாக மாறுவதற்கான வாய்ப்புக்களை மறுப்பதற்கில்லை.

இந்தியாவின் அழைப்பை தேசிய மக்கள் சக்தி பெரு மகிழ்வாக உள்ளூறக் கொண்டாடுகின்றது. அதனை வெளிக்காட்டவும் செய்கின்றது. ஆனால், தன்னுடைய இடதுசாரி அடையாளத்தையும் கைவிடவில்லை என்று காட்டுவதற்காக டில்லிப் பயணத்தை முடித்து திரும்பும் வழியில் கேரளா சென்று அனுரகுமார குழுவினர் வந்திருக்கிறார்கள். இந்தியாவின் தற்போது இடதுசாரிகள் ஆட்சி செலுத்தும் ஒரே மாநிலம் கேரளாதான். இடதுசாரிகள் கேரளாவைத் தவிர்த்து ஏனைய இடங்களில் ஒற்றை இலக்க ஆசனங்களைக் கைப்பற்றுவதே இன்றைக்கு பெரிய காரியமாகிவிட்டது. அப்படியான சூழலில் இந்தியாவில் இடதுசாரிகள் ஆட்சி செலுத்தும் மாநிலத்துக்கும் சென்று வந்திருக்கிறோம் என்று காட்ட அனுரகுமார முயன்றிருக்கிறார். ஆனால், அம்மாநில முதலமைச்சர் பிரணாஜி விஜயனை அவர்களினால் சந்திக்க முடியவில்லை.

இந்தியாவின் அழைப்பும், டில்லியில் வழங்கப்பட்ட முக்கியத்துவமும் தேசிய மக்கள் சக்தியை உற்சாகப்படுத்தியிருக்கிறது. அந்த மனநிலையோடு தேர்தல்களை நோக்கிய நம்பிக்கை பயணத்தை தேசிய மக்கள் சக்தி தென் இலங்கையில் ஆரம்பிக்கலாம். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி காண்பதற்கு சிறுபான்மையினரின் வாக்குகள் அவசியமானவை. அதுவும் மும்முனைப் போட்டிக் களத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் அதிக தாக்கத்தைச் செலுத்தும் வல்லமை கொண்டவை. அப்படிப்பட்ட சூழலில், சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெறுவதற்கு தேசிய மக்கள் சக்தி என்ன திட்டங்களை முன்னெடுக்கப்போகின்றது என்ற கேள்வி முக்கியமானது. அதுவும், வடக்கு – கிழக்கு இணைப்பைப் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து பிரித்தது ஜே.வி.பி. என்ற வெறுப்பு தமிழ் மக்கள் மத்தியில் உண்டு. அத்தோடு, தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான பயணத்தை ஜே.வி.பியோ, இன்றைய தேசிய மக்கள் சக்தியோ ஒருபோதும் அங்கீகரித்தது இல்லை. ஒற்றை இலங்கைக்குள் ஒரே அதிகார மையமாக திரள்வதையே, பௌத்த மேலாதிக்க சக்திகள் போன்று தேசிய மக்கள் சக்தியும் வலியுறுத்தி வந்திருக்கின்றது. இந்தப் பின்னணியினால், தமிழ் மக்கள் ஒருபோதும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் செல்லும் வாய்ப்புக்கள் இல்லை. அதுபோல, ராஜபக்ஷக்களுக்கு எதிரான கட்டத்திலேயே முஸ்லிம் மக்களும் தங்களின் வாக்களிப்பை உறுதி செய்யும் சூழல் தற்போதுள்ளது. அப்படியான சூழலில் தேசிய மக்கள் சக்தியும் தென் இலங்கைக்குள் மாத்திரம் வாக்கு அறுவடை நடத்தி, ஜனாதிபதித் தேர்தலில் வெல்வது சாத்தியமான ஒன்றல்ல.

# இன்றைய ராசி பலன்கள் - 11.02.2024




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கும், உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கும் சாதகமான நாள். உங்கள் செயல்களை இன்று தன்னம் பிக்கையுடன் ஆற்றுவீர்கள்.

உங்களின் தனிப்பட்ட திறமைகள் காரணமாக உங்கள் செயல்திறன் எடுத்துக்காட்டாக அமையும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறையை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பு வளரும்.

கையில் உபரிப் பணம் காணப்படும். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று உங்கள் இலட்சியங்கள் பூர்த்தி யடைந்து மகிழ்ச்சி கிடைக்கும் நாள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். உங்கள் அணுகுமுறையில் தன்னம்பிக் கையும் நகைச்சுவை உணர்வும் வெளிப் படும்.

பணியில் திருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரி களின் பாராட்டு கிடைக்கும் சிறந்த வாய்ப்பு காணப்படு கின்றது.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தை களை பகிர்ந்து கொள்வீர்கள். உறவில் பரஸ்பர அன்பு காணப்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பண வரவிற்கான அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நேர்மறையான உங்கள் மனநிலை உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று செயல்களை பொறுமை யுடன் கையாள வேண்டிய சூழ்நிலை காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதம் காணப்படும். ஒரு முடிவை எடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசனை செய்வதன் மூலம் நன்மை விளையும்.

இன்று முன்னேற்றகரமான பலன்களுக்கு சாத்தியம் இல்லை. அதிகப் பணிகளை நீங்கள் திட்டமிட்டு அதன் படி கையாள வேண்டும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணையுட னான உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும். சகஜமான அணுகுமுறை நல்ல பலனைத் தரும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.




இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி சவால்களை திறமையாக கையாள வேண்டும்.உறுதி மேற்கொண் டால் போரட்டங்களை சமாளிக்கலாம் இன்று உற்சாகமாக இருங்கள்.

பணியின்போது வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். அதிகப் பணிகள் காரணமாக நீங்கள் திட்டமிட்டு செயல்படுவீர்கள். அது நீங்கள் சிறப் பாக பணியாற்ற உதவும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக் கும். உங்கள் துணையுடன் நகைச்சுவை அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணப்பற்றாக்குறை இன்று கவலையை அளிக்கும். உங்கள் பொறுப்புகளை சந்திப்பதை கடினமாக உணர் வீர்கள்.




உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகமான மனநிலை காரணமாக இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிட்டும். உங்கள் இலக்கு களை அடைய கடினமாக உழைக்க வேண்டும். அனைத்து விதத்திலும் செழிப்பான நாள்.

புதிய வேலை வாய்ப்புகள் காணப்படும். இது உங்க ளுக்கு திருப்தியையும் உற்சாகத்தையும் அளிக்கும். நீங்கள் பணிகளை விரும்பிச் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். ஸ்திரத் தன்மை காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் முயற்சிகள் அனைத் திலும் வெற்றி கிடைக்கும் சாதகமான நாள். சிறந்த சூழ்நிலை காணப்படும். நீங்கள் ஆற்றலுடனும் உற்சாகமான மன நிலையுடனும் இருப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியின் மூலம் வெற்றிகரமான பலன்கள் கிட்டும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் பழகும் போது நீங்கள் அமைதி யாக பழக வேண்டும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இந்தப் போக்கு மிகவும் அவசியம்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய முதலீடு களில் பங்கு கொள்ள இன்று நீங்கள் திட்டமிடலாம்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரண மாக நீங்கள் இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப் பீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சி குறித்த உங்கள் முயற்சியில் வெற்றி கிட்டும் நாள். இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

பணியிடத்தில் பதவி உயர்விற்கான சாத்தியம் உள்ளது. நீங்கள் தரமான பணிகளை வழங்குவீர்கள். உங்கள் செயல்திறன் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் அன்பான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்ச்சிப் படுத்துவீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வது திருப்தியை அளிக் கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரண மாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றுகட்டுப்பாடற்றசூழ்நிலைகாணப் படும் நாள். இன்றைய சவால்களை திறமையாக கையாள அறிவார்ந்த திட்டமும் உறுதியான போக்கும் தேவை.

பணிகள் அதிகமாகக் காணப்படும். பணி சம்பந்தமான பதற்றம் காணப்படும்.

இருவரிடையே நிலவும் கருத்து வேறுபாடு காரண மாக மகிழ்ச்சியான தருணங்களை கழிக்க இயலாது.

பணப்புழக்கம் இன்று குறைந்து காணப்படும். இது உங்களுக்கு சிறிது கவலையை அளிக்கும். உங்கள் நிதிநிலையை சிறப்பாக ஆக்க நீங்கள் போராட வேண்டியிருக்கும்.

இன்று நீங்கள் அமைதியின்மையையும் அசௌ கரியத்தையும் உணர்வீர்கள். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.02.2024




இன்று நன்மை விளையும் நாள். திருப்தி காணப்படும் நாள். உங்கள் முயற்சியின் மூலம் வெற்றி காணும் நாள். பயணங்கள் மூலம் ஆதாயம் கிட்டும் நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களின் தனித்த திறமை மூலம் அவர்களின் ஆதரவும் அங்கீகாரமும் கிடைக்கப்பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் நடைபெறலாம். விருந்தினர்களின் வருகையால் இருவரும் அவர்கள் தேவைகளை பூர்த்தி செய்வதில் மும்மரமாக இருப்பீர்கள்.

பண வரவு அதிகமாக இருக்கும். பணத்தை சேமிக்கும் அளவிற்கு பாதுகாப்பு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நம்பிக்கையான எண்ணங்களை வளர்க்க வேண்டும். இதனால் உற்சாகமான மன நிலையும் நலமும் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய உங்கள் திறமைகளை நிரூபிக்க முயற்சி எடுக்க வேண்டும்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. உங்கள் பணிகளை பொறுமையாக மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். அத்தகைய உணர்வுகளுக்கு இடம் அளிக்காதீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. உங்கள் பணத்தை விழிப்புடன் பாதுகாக்க வேண்டும். பணத்தை விவேகத்துடன் கையாள்வது சிறந்த பலனைத் தரும்.

அதிக பதற்றம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று தேவையற்ற மனக் குழப்பம் மற்றும் பதற்றம் காணப்படும். அமைதியான அணுகுமுறை மூலம் இந்தச் சூழ்நிலையை சமாளிக்கலாம்.

அதிகப் படியான வேலைகளை கவலையை அளிக்கும். பணியிடத்தில் தவறுகளை தவிர்க்க முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் பதற்றமான மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்வதை கடினமாக உணர்வீர்கள்.

பதற்றம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. எதையும் லேசாக எடுத்துக் கொண்டு உங்களை அமைதியாக வைத்திருங்கள்.




இன்று உங்கள் வளர்ச்சிப் பாதையில் தடைகள் காணப்படும். என்றாலும் அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்பான அணுகுமுறை மூலம் சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்படும் என்பதால் பயணத்தின் போது கவனமாக இருக்க வேண்டும்.

அமைதியாகவும் சுமூகமாகவும் இருப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும். உங்கள் மன நிலையில் மாற்றம் வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நீங்கள் உங்கள் சம்பாத்தியத்தை அனுபவிக்கும் நிலையில் இருக்க மாட்டீர்கள்.

இன்று பதற்றமாக காணப்படுவீர்கள்.








# திருமலையில் கப்பல் கட்டும் தளம் அமைப்பது பற்றி கிழக்கு ஆளுநரிடம் இந்தியத் தரப்பினர் யோசனை

(நூருல் ஹுதா உமர்)

இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் இணைச் செயலாளர் பிரபாகர் மற்றும் அவரது கடற்படைக் குழுவினர் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தமாக வருகைதந்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானைச் சந்தித்துக் கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

இச்சந்திப்பில் திருகோணமலை துறைமுகத்தில் கப்பல் கட்டும் தளம் ஒன்றை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராயப்பட்டது.

திருகோணமலை துறைமுகத்தை மேம்படுத்துவதன் ஊடாக வங்காள விரிகுடாவில் பயணிக்கும் கப்பல்களுக்கு அவசர நிலையின் போது விரைவான சேவைகளை வழங்க முடியும் என இந்திய இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் குழுவினர் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர் எனக் கூறப்பட்டது.












# டயலொக்கின் உழவர் தோழன் மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஆகியன தேயிலை பயிர்ச்செய்கையில் விவசாய தனிச்சிறப்பை இயக்குகின்றன




**புகைப்படம் இடமிருந்து வலமாக:** டயலொக் நுவரெலியாவின் பிரதேச பொறுப்பாளர் புபுது சமரவிக்கிரம, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் டிஜிட்டல் புத்தாக்கம் மற்றும் உள்ளடக்கம் அலகு முகாமையாளர் தருஷ வணிகசேகர, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் பேண்தகைமை மற்றும் இடர் மற்றும் இணக்கத்தன்மை குழும தலைவர் அசங்க பிரியதர்ஷன, தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி / இயக்குனர் கலாநிதி கே. எம். மோஹொட்டி, தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் மத்திய மலை நாட்டு பிராந்திய மையத்தின் பொறுப்பதிகாரி / ஆலோசனை அதிகாரி திரு.கே.ஆர்.டபிள்யூ.பி. கஹந்தவா, மற்றும் டிஜிட்டல் உள்ளடங்கிய குழு நிலைத்தன்மை ஆலோசகர் மலித் தேவசுரேந்திரா.

உழவர் தோழன், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி வழங்கும் இலங்கையின் மாபெரும் கையடக்க தொலைபேசி சார்ந்த விவசாய ஆலோசனை சேவை ஆகும். தேயிலை பயிர்ச் செய்கையில் ஈடுபடும் சமூகத்தை வலுவூட்டுவதன் மூலம் தேயிலை ஆராய்ச்சி நிலையத்துடன் பல்லாண்டு காலமாக பேணிவரும் கூட்டாண்மையோடு அவர்களது திறந்த நாள் நிகழ்வின் போது தரமான விவசாய தீர்வுகளையும் நிறுவனம் அளித்தது.

இந்த கூட்டு முயற்சியானது தேயிலை பயிரிடுவோருக்கு உழவர் தோழன் தளத்தின் மூலம் அத்தியாவசிய ஆலோசனை சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இது தேயிலை பயிர்ச்செய்கைக்கு மதிப்பு மிக்க வளமாக செயற்படுகிறது. மேலும், தேயிலை ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து, உழவர் தோழன் தேயிலை பயிர்ச்செய்கை நடைமுறைகளை முன்னெடுப்பதற்கு அர்ப்பணிக்கப்பட்ட பரவலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகிறது. உழவர் தோழன் மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையம் மூலம் இயக்கப்படும் இந்த முயற்சி, ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு ஏற்ப, குறிப்பாக இலக்கு 1 – எல்லா இடங்களிலும் எல்லாவிதமான வறுமையையும் முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் இலக்கு 9 – நெகிழ்வான உட்கட்டமைப்பு, உள்ளடக்கிய மற்றும் நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல் ஆகியவற்றிற்கு ஏற்ப, தேயிலை தொழிற்துறையை புதுமைப்படுத்த அதிநவீன டிஜிட்டல் விவசாய தீர்வுகளை அறிமுகப்படுத்துவதில் உறுதியாக உள்ளது.

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் திறந்த நாளில், உழவர் தோழன் மற்றும் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஆகியவை தேயிலை பயிரிடுவோரை டிஜிட்டல் முறையில் மேம்படுத்துவதற்காக தங்கள் சேவைகளை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை அறிவித்தன. இன்று வரை, 35,000 தேயிலை பயிரிடுவோரை இந்த app பதிவு செய்துள்ளது, அவர்கள் தேயிலை பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தி குறித்து சரியான நேரத்தில் வழிகாட்டுதலைப் பெறுகின்றனர். இந்த சேவைகள், தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி, தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆலோசனை ஆதரவுடன், தேயிலை பயிரிடுவோர் எதிர் கொள்ளும் சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. தேயிலை பயிரிடுவோரின் தேவைகளை நன்கு புரிந்து கொள்ளவும் அவர்களின் ஆதரவை மேம் படுத்தவும் உழவர் தோழன் மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு இந்த நிகழ்வு ஒரு மதிப்புமிக்க வாய்ப்பை வழங்கியது.

(B2ஆம் பக்கம் பார்க்க)




# மக்கள் வங்கி 50,000 யூ டியூப் சந்தாதாரர்களை எட்டியுள்ளது



மக்கள் தனது யூ டியூப் தளமானது 50,000 சந்தாதாரர்கள் என்ற சாதனை இலக்கினை எட்டியுள்ளமை தொடர்பில் பெருமையுடன் அறிவித்துள்ளதுடன், நாட்டில் எந்தவொரு நிதி நிறுவனமும் கொண்டுள்ள அதிகூடிய எண்ணிக்கையாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த சாதனை இலக்கினை இலங்கையில் எட்டியுள்ள முதலாவது நிதி நிறுவனம் என்ற வகையில், டிஜிட்டல் வழியிலான ஈடுபாட்டைப் பேணுவதில் தான் கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் மக்கள் வங்கி இதன் மூலமாக நிரூபித்துள்ளது.

வங்கித்துறையில் எதிலும் முன்னோடியாகத் திகழ்வதில் பெயர்பெற்றுள்ள மக்கள் வங்கி, தனது வாடிக்கையாளர்களுடன் இணைப்பில் இருப்பதற்காக முகநூல், இன்ஸ்டாகிராம், டிக்டொக் மற்றும் எக்ஸ் (டுவிட்டர்) அடங்கலாக டிஜிட்டல் தளங்களை தொடர்ச்சியாக உள்வாங்கி வந்துள்ளது. திறன்மிக்க தொடர்பாடல் மற்றும் வாடிக்கையாளர்களை எட்டுவதில் பல்வகைப்பட்ட சமூக ஊடக தளங்களை உபயோகப்படுத்துவதில் வங்கியின் அர்ப்பணிப்பை யூ டியூப் தளத்தில் அதன் சாதனை நமக்கு அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

மக்கள் வங்கியின் யூ டியூப் தளமானது பல்வேறுபட்ட தகவல் விபரங்களைக் கொண்டுள்ள ஒரு மையமாக மாறியுள்ளதுடன், நிதியியல் தொடர்பான அறிவு மற்றும் வங்கியின் செயல்பாடுகள் தொடர்பில் பெறுமதிக்க ஆழமான விடயங்களை வழங்குகின்றது. சமூக ஊடக தளங்களை உபயோகிக்கும் வங்கியின் மூலோபாயமானது வாடிக்கையாளர்களுடனான இடைத்தொடர்பு மற்றும் தொடர்பாடல் ஆகியன மாற்றம் கண்டு வருகின்ற போக்கினை அனுமானித்து, அவற்றை முற்கூட்டியே உள்வாங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமையை பிரதிபலிக்கின்றது.

---

**டயலொக்கின் உழவர் தோழன்...**

(B1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரட்சிகரமான, மும்மொழி உழவர் தோழன் சேவையானது, விவசாயிகளின் நெருக்கடியான சவாலை சரிசெய்வதற்கு முயற்சிக்கிறது. விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் துல்லியமான தகவல்களை வழங்குவதன் மூலம், விவசாயிகளுக்கு செயல்திறனை மேம்படுத்தவும், பயிர்களைப் பாதுகாக்கவும், இறுதியில் அறுவடைகளை அதிகரிக்கவும் இந்த தளம் உதவுகிறது. தேயிலை உட்பட 32 பயிர்களுக்கான ஆலோசனை சேவைகள் தற்போது உழவர் தோழன் தளத்தில் வழங்கப்படுகின்றன. பயனர்கள் முழு அளவிலான உழவர் தோழன் சேவைகளை Apps மூலம் அணுகலாம், Google Play Store இலிருந்து நேரடியாக பதிவிறக்கம் (Download) செய்யலாம் அல்லது குரல் சேவைக்கு 616 ஐ டயல் செய்யலாம்.

மேலதிக தகவல்களை அணுகிட https://dialog.lk/govi-mithru ஐ பார்வையிடவும்.




# பெண் தொழில்முனைவோர் விருது WCIC பிரதிபாபிஷேகாவிற்கு பிளாட்டினம் அனுசரணையாளராக பெண் தொழில்முனைவோருக்கு அதிகாரமளிக்கும் AIA இன்சூரன்ஸ்




இலங்கையின் மிகவும் மதிப்பிற்குரிய காப்புறுதி நிறுவனமாக (LMD மற்றும் NielsenIQ) இனால் கௌரவிக்கப்பட்டுள்ள யுஐயு இன்சூரன்ஸ் நிறுவனம் எதிர்வரும் பெண் தொழில்முனைவோர் விருதான பிரதிபாபிஷேகாவிற்கு பிளாட்டினம் அனுசரணையாளராக பெண்கள் தொழில் துறை மற்றும் வர்த்தகச் சம்மேளனத்துடன் (WCIC) தனது மூலோபாயக் கூட்டாண்மையினை அறிவிப்புச் செய்வதில் பெருமையடைகின்றது. இந்த முன்முயற்சியானது பணிச்சூழலில் பெண்களுக்கு சமமான வாய்ப்புக்களை நிலைநிறுத்துவதற்கும், வணிகத்தில் பெண்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளைக் கொண்டாடுவதற்கும் யுஐயு இன் உறுதிப்பாட்டை மிகவும் பிரதிபலிக்கின்றது.

பிளாட்டினம் அனுசரணையாளராக தனது உதவியினை விரிவுபடுத்துவதன் மூலம் பெண் தொழில்முனைவோர் விருதுகளின் நேர்மறையான விளைவை அதிகப்படுத்துவதற்கு நிறுவனம் தன்னை மிகவும் அர்ப்பணித்துள்ளது. இந்த அனுசரனையானது பெண்களை வணிகத்தில் மேம்படுத்தும் முயற்சிகளுக்கு உதவுதல் மற்றும் பணிச்சூழலில் பெண்களுக்கு சமமான வாய்ப்புக்களை வழங்கி ஊக்குவித்தல் ஆகிய யுஐயு இன் பெறுமதிகளுடன் தடையின்றி ஒத்துப் போகின்றது.

யுஐயு இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சதுரி முனவீர இக்கூட்டாண்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கருத்துத் தெரிவிக்கையில், 'பெண்கள் தொழில்முனைவோர் விருதுகள் பிரதிபாபிஷேகாவிற்கு பிளாட்டினம் அனுசரணையாளராக பெண்கள் தொழில்துறை மற்றும் வர்த்தகச் சம்மேளனத்துடன் (WCIC) இணைந்து கொள்வதில் நாங்கள் மிகவும் பெருமை அடைகின்றோம். இந்த கூட்டாண்மை பெண் தொழில்முனைவோர் வணிக உலகில் செழிப்படைந்து குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கக்கூடிய சூழலை வளர்ச்சியுறச் செய்யும் எங்களின் அர்ப்பணிப்பிற்குச் சான்று பயக்கின்றது. நாங்கள் யுஐயு நிறுவனத்தில் பன்முகத்தன்மையின் சக்தியை மிகவும் நம்புகின்றோம். மேலும் தொழில்முனைவில் பெண்களின் சாதனைகளை ஆதரிப்பதற்கும் அதனைக் கொண்டாடுவதற்கும் நாங்கள் மிகவும் உற்சாகமாகவே இருக்கின்றோம்' எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

AIA இன்சூரன்ஸ் நிறுவனத்தின் உறுதிப்பாடு சாதாரண உதவியினைத் தாண்டியதாகவே அமைகின்றது. இது இலங்கையில் பெண்களுக்கு சாதகமான மாற்றத்திற்கு உந்து சக்தியாக இருப்பதற்கான உறுதிமொழியாகும். AIA இன்சூரன்ஸ் பெண்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடுவதுடன், பெண் தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் மிகவும் பொருத்தமான தீர்வுகளையும் வழங்கும்.

WCIC இனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரதிபாபிஷேகா – பெண் தொழில்முனைவோர் விருதுகள் பெப்ரவரி 2024 இல் திட்டமிடப்பட்டுள்ளதுடன் இது நிச்சயமாக பெண்கள் தொழில்முனைவோரின் பெரும் கொண்டாட்டமான நிகழ்வாகவே இடம்பெறும். யுஐயு இன்சூரன்ஸ் இந்த நிகழ்வின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்வதனையும் நிதி சுதந்திரம் மற்றும் செழிப்பான பயணத்தில் பெண் தொழில்முனைவோருக்கு ஆதரவளிப்பதனையும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது.

பெண் தொழில்முனைவோரின் புதுமையான மற்றும் நேர்மறையான விளைவை ஏற்படுத்தும் பங்களிப்புகளை அங்கீகரித்து அவர்களுக்குத் தகுதியான அங்கீகாரம் மற்றும் கௌரவத்தை வழங்குவதற்கான ஒரு தளமாகவே இந்த நிகழ்வு உறுதியாகத் திகழ்கின்றது. யுஐயு இன்சூரன்ஸ் இந்த நிகழ்வின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்வதனை மிகவும் ஆவலுடன் எதிர்நோக்குவதுடன் அதிகமான பெண்கள் தடைகளை உடைத்து அவர்களின் தொழில் முனைவோர் முயற்சிகளில் சிறந்து விளங்குவதற்கும் உதவி செய்கின்றது.